22.04.2026 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை. (ஒ.எஸ்.எண்.62/2021 ) திரு.இராமசாமி.

<u>2 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) வழக்கு சம்பந்தமான முழு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து எந்த வருடம் யாரிடம் வாங்கப்பட்டது என்றால் அழகம்மாளிடமிருந்து எனது தாத்தா கிருஷ்ணசாமி ரெட்டியார் வாங்கினார். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் வா.சா.ஆ.9 கிரைய ஆவணமா என்றால் ஆமாம். கிருஷ்ணசாமியின் அப்பா பெயர் என்னவென்றால் கிருஷ்ணசாமி. வா.சா.ஆ.9 கிரையம் பெற்ற கிருஷ்ணசாமியின் அப்பா பெயர் வெள்ளையப்ப ரெட்டியார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் கிருஷ்ணசாமி ரெட்டியார் தாவாச்சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றதாக போடப்பட்டுள்ளது என்றால் அழகம்மாளிடமிருந்து. அழகம்மாளின் கணவர் பெயர் வா.சா.ஆ.9 ல் என்ன போடப்பட்டுள்ளது என்றால் சண்முகசுந்தர ரெட்டியார். வா.சா.ஆ.9 சொத்து விவரத்தில் ஜமீன் சர்வே எண் என்னவென்றால் 410/ஏ என்று கண்டுள்ளது. வா.சா.ஆ.9 சொத்து விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நான்குமால் விவரத்தை படித்துக்காண்பிக்கச்சொல்லி கேட்ட போது தங்கள் நிலத்திற்கும் தெற்கு, சாமிரெட்டியார் நிலத்திற்கு கிழக்கு, வெள்ளையப்ப ரெட்டியார் நிலத்திற்கு வடக்கு, பொம்மு ரெட்டியார் மற்றும் சுப்பம்மாள் ஆகியோர்கள் நிலத்திற்கும் மேற்கு என்று கண்டுள்ளது. எனது தாத்தா கிருஷ்ணசாமி ரெட்டியார் என்ன ஆனார் என்றால் இறந்து விட்டார். எனது தாத்தா கிருஷ்ணசாமி ரெட்டியாருக்கு யாரெல்லாம் வாரிசுகள் என்றால் எனதுஅப்பா மட்டும் தான். எனது அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லையா என்றால் இருந்தார்கள் இறந்துவிட்டார்கள். யார் இருந்தார்கள் எப்போது இறந்தார்கள் என்றால் பெருமாள் ரெட்டியார், மற்றொரு பெருமாள்ரெட்டியார்,இராமசாமி ரெட்டியார், சாமிரெட்டியார், கிருஷ்ணசாமி ரெட்டியார்,லெட்சுமியம்மாள், அழகர்சாமி, சுப்புத்தாய்,ருக்குமணி ஆகிய 9 நர்பள் இருந்தார்கள். மேற்படி நபர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொல்லி எனது வழக்குரையில் சொல்லி ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.18 ஆவணங்களை காண்பித்து எந்த ஆவணம் இறப்பு ஆவணம் என்றால் வா.சா.ஆ.10 ஆவணத்தை காண்பிக்கிறார்.

2) வா.சா.ஆ.10 என்ன ஆவணம் என்று சொல்ல முடியுமா என்றால் இறப்பு சான்று. நான் சொல்லுவது போன்று அது இறப்புசான்று இல்லையென்றும் எனது தாத்தா கிருஷ்ணசாமி ரெட்டியாரின் இறப்பை பதிவு செய்தபோது கொடுத்த சான்று என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சான்றுக்கு பின்னர் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மனுக்கொடுத்திருந்தேன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிருஷ்ணசாமி ரெட்டியாருக்கு 9 வாரிசுகள் என்பதற்கு மறைத்து எனது தந்தை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை 1960 ஆம் ஆண்டு கிரையம் பெறும் போது யாருடைய பெயருக்கு பட்டா பெறப்பட்டது என்று பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை கிரைய ஆவணம் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா கிருஷ்ணசாமி ரெட்டியார் 1960–லிருந்து அவர் இறக்கும் காலமான 1984 ஆம் ஆண்டு வரை அனுபவம் செய்து வந்ததை காட்டக்கூடிய தீர்வை செலுத்தப்பட்டதீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்திருந்தேன். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.18 ஆவணங்களை சாட்சியிடம் கொடுத்து அது என்ன ஆவணம் என்று கேட்ட போது வா.சா.ஆ.12 ஐ சாட்சிதீர்வை ரசீதாக கூறுகிறார். வா.சா.ஆ.12 தீர்வை ரசீது எந்த பசலி ஆண்டுக்கு தீர்வை செலுத்தப்பட்டுள்ளது என்றால் பசலி ஆண்டாக 1413 தீர்வை செலுத்தும் பசலி ஆண்டாக 1411 ஆக குறிப்பிடப்பட்டு 04.03.2004 ல் கிருஷ்ணசாமி என்ற சாமி ரெட்டியார் பெயரில் 170596 என்ற வரிசையிலும், 170597 பசலி 1411 க்கு கி.கிருஷ்ணசாமி பெயரில் 18.03.2004 ல் செலுத்தப்பட்டள்ளது, வரிசை எண்.170598 பசலி ஆண்டு 1411 கி.கிருஷ்ணசாமி பெயரில் 31.03.2004, வரிசை எண்.170593 பசலி ஆண்டு 1410 கிருஷ்ணசாமி என்ற சாமி ரெட்டியார் பெயரில் 06.02.2004 தேதியில் செலுத்தப்பட்டுள்ளது. வரிசை 170595 பசலி ஆண்டு 1413 செலுத்தப்படும் பசலி ஆண்டு 1411, 27.02.2004 தேதியிட்டு கிருஷ்ணசாமி என்ற சாமி ரெட்டியார் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தீர்வை ரசீதில் கண்ட கிருஷ்ணசாமி என்ற சாமி ரெட்டியார் யார் என்றால் எனது தந்தையின் அண்ணன் ஆவார்.

3) தாவா சொத்து அமைந்துள்ள ஊர் எது என்றால் குமாரபுரம். குமாரபுரம் கிராமத்தில் எனது சொத்து மட்டும் உள்ளதா அல்லது வேறு நபர்களின் சொத்து உள்ளதா என்றால் வேறு நபர்களுக்கு சொத்து உள்ளது. வா.சா.ஆ.10 ரசீதுகள் ஒரே

மாதத்தில் வரிசை எண்.170593, 170595, 170596, 170597, 170598 ஆகிய வரிசையில் செலுத்தப்பட்டியிருப்பதால் வழக்கிற்காக போலியாக செலுத்தப்பட்ட ரசீதுகள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 காண்பித்து என்ன ஆவணம் என்றால் எஸ்.எல்.ஆர். நகல். எந்த வருடத்திற்குரியது என்றால் 03.07.1957 க்குரியது. தாவாச்சொத்து ஜமீன் சர்வே எண்.410/ஏ ஆகும்.வா.சா.ஆ.11 ல் எத்தானவது வரிசையில் எழுதப்பட்டுள்ளது என்றால் 2 வது வரிசையில் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.11 ல் ஜமீன் சர்வே எண்.410/ஏ–க்கு என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 46/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்லுவது தவறு என்றும் ஜமீன் சர்வே எண்.410/1 ஏ– க்கு சர்வே எண்.46/2 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் திருத்தப்பட்டுள்ளது. மேற்படி திருத்தம் யார் செய்தார்கள் அதற்குரிய சுருக்கொப்பம் உள்ளதா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்டது யார் திருத்தியது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ல் உரிமையாளர் பெயர் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இராமலிங்கம் ரெட்டியார் மகன் சாமிரெட்டியார், ஓவலஸ் ரெட்டியார் மகன் ஓவலஸ் ரெட்டியார் என்று கண்டுள்ளது. வா.சா.ஆ.11 ல் முதல் வரிசையில் கண்ட சர்வே எண்.46/1 உரிமையாளர் பெயர் என்ன குறிப்பிடபடப்பட்டுள்ளது என்றால் இராமலிங்கம் ரெட்டியார் மனைவி மாரியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்து வாங்கியவர் பெயர் வா.சா.ஆ.11 ல் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சாட்சி வா.சா.ஆ.11 யாருடைய பெயரோ எழுதப்பட்டுள்ளது என்று கூறுகிறார். வா.சா.ஆ.11 உண்மையானதா அல்லது பொய்யானதா என்றால் உண்மையானது. கிருஷ்ணசாமி ரெட்டியாரின் மகன் தான் எனது அப்பா என்றால் ஆமாம். 1984 வரையிலிருந்து இதுவரை எனது தந்தை தான் அனுபவம் செய்து வந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் என்னவென்றால் பத்திரம், வில்லாங்க சான்று, தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேன். ரசீது என்பது வா.சா.ஆ.12 என்றால் சரிதான். வேறு ரசீது நாங்கள் செலுத்தியதை காட்டக்கூடியது இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தை பார்த்து யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்று சொல்ல முடியுமா என்றாலும் வழக்கின் 1 ம்பிரதிவாதி, 2 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தது இந்த ஆவணம் என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.13 சொத்து விவரத்தில் என்ன என்ன சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்றால் 44/6, 39/2, 39/3, 46/2, 46/1,39/1 ஆகிய சர்வே

எண்கள் காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.46/1 வழக்கு சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் சர்வே எண்.46/1 சொத்து திருமதி.மாரியம்மாள் க/பெ.இராமலிங்க ரெட்டியாருக்கு உரிமைப்பட்ட சொத்தாக எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது ஆனால் அது தவறு. வா.சா.ஆ.13 மோசடியாக எழுதப்பட்டது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் ஜமீன் பத்திரம் உள்ளதால் கூறுகிறேன். ஜமீன்பத்திரம் எது என்றால் வா.சா.ஆ.1. வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து வா.சா.ஆ.13 மோசடி என்று கூறுகிறேன். வா.சா.ஆ.13 சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2021 ல் தெரியவந்தது. வா.சா.ஆ.13 ஆவணத்தில் மொத்தம் 6 சர்வே எண் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது அதில் எத்தனை சர்வே எண் எனக்குப் பாத்தியப்பட்டது என்றால் சர்வே எண்.46/1 மட்டும் தான். ஆகையால் முழு ஆவணத்தை பொறுத்து இல்லாத நிலை என பரிகாரம் கோரும் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணம் 2 ம்பிரதிவாதி, 3 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆவணத்தை பார்த்து யார் யாருலுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்று சொல்ல முடியுமா என்றால் பால்ராஜ் என்பவர் கீரின் எனர்ஜி நிறுவனத்திற்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் சொத்து விவரத்தில் எத்தனை சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.13 ல் கண்ட 6 சர்வே எண் சொத்தும் எழுதப்பட்டுள்ளது. அதில் எனக்கு எத்தனை சர்வே எண் பாத்தியம் என்றால் 46/1 ஒரு சர்வே எண் மட்டும் தான். வா.சா.ஆ.14 எதன் அடிப்படையில் மோசடி ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் நாங்கள் அழகம்மாளிடமிருந்து வாங்கி அடமானம் வைத்த சொத்து அதை இவர்கள் வேறு நபர்களிடம் வாங்கியுள்ளார்கள். தாவாச்சொத்து ஆதியில் அழகம்மாளுக்குப் பாத்தியப்பட்டது என்று சொல்லுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.14 மோசடியான ஆவணம் என்று எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 2021 ல் தெரிய வந்தது. தாவா வழக்கு எந்த தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 24.03.2021 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராது 7 வது பக்கத்தில உறுதிமொழியில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 24.03.2020 ஆகவும் ஒரு இடத்தில் 24.03.2021 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கில் சீர்திருத்தம் செய்யப்பட்ட பிராதிலும் மேற்கண்டபடி 24.03.2020, 24.03.2021 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது பாரா 7 வை படித்து அதில் கண்டுள்ள சங்கதிகளை சொன்னால் போதுமானது என்றால் கடந்த 20.06.2020 தேதியில் வாதி விவசாயம் செய்து கொண்டிருக்கும் போது மேற்படி விவசாய நிலத்தில் 3 ம்பிரதிவாதி மோசடி ஆவணத்தை அத்துமீறி நுழைந்து இடையூறு செய்தார் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். எனது நிலம் வானம்பார்த்த நிலம் என்றால் சரிதான். நான் விவசாய வேலை செய்கிறனா என்றால் ஆமாம். வானம்பார்த்த பூமியில் மழை பெய்யும் காலத்தில் விவசாம் செய்ய முடியுமா அல்லது எப்போது வேண்டுமானாலும் விவசாயம் செய்ய முடியுமா என்றால மழைபெய்யும் காலத்தில் மட்டும் தான் விவசாயம்செய்ய முடியும். ஆங்கில ஜூன் மாதம் என்பது தமிழுக்கு வைகாசி மாதம் என்றால் சரிதான். பொதுவாக வைகாசி மாதத்தில் மழை பெய்யாது என்றால் சரிதான். விவசாயம் செய்து வருவதாக சொல்லுவதற்கு தொன்று தொட்டு விவசாம் செய்யும் நன்பிக்கை வைத்து பயிர் அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லுவது போல் தாவாச்சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றும் வழக்கில் சொல்லப்படும் காலம் மழைகாலம் இல்லை என்பதால் பொய்யான வழக்கு மூலத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அவர்கள் தான் அனுபவத்தில் தான் உள்ளது என்றும் நான் பொய்யாக தாக்கல் செய்துள்னே் என்றால் சரியல்ல. பிரதிவிாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இருந்து வருவதால் பிரதிவாதி வாதியை இடையூறு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 எனது வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் 2 வது பக்கத்தில் 2 வது பாராவில் கீழ் இருந்து 9 வது வரியில் இதன் தபசில் கண்ட சொத்தானது நாளது தேதிவரை எமது கட்சியின் அனுபவத்தில் ஆளுகையிலும் இருந்து வருகிறதுஎன்றும் மேற்படி வருவாய்துறையில் ஏற்பட்ட இதன் தபசில் சொத்தை பொறுத்து நிவர்த்தி செய்து வாரிசு அடிப்படைடியில் பட்டா பெயர் மாற்றம் செய்யும் வகைக்கு வில்லங்க சான்று எடுத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு முன்னுக்கு பின் முரணாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சரியான நபரிடமிருந்து கிரையம் பெறாமல் எனக்குவேண்டிய நபரிடமிருந்து பொய்யாக கிரையம் பெற்று இந்த வழக்கை பொய்யாக தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் இடைஞ்சலுக்கு வராமல் இருப்பதற்காக போட்டுள்ளேன்.

6) பிரதிவாதிகள் பதிவு செய்துள்ள ஆவண விவரங்கள் பற்றிமுன்பே தெரியும் என்றும் பட்டா பெயர் மாற்றம் செய்யும் தெரிய வந்ததாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு பிரதிவாதிகள் கிரையம் பெற்றதிலிருந்து தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி 1ம்பிரதிவாதியிடம் 2006ல் கிரையம் பெற்று தீர்வை செலுத்தி அனுபவித்து வந்தார் என்றும் அதன்பின்பு 2ம்பிரதிவாதி 3ம்பிரதிவாதிக்கு 2014 ஆம் ஆண்டு கிரையம் கொடுத்துஅனுபவம் ஒடைத்து தீர்வை செலுத்தி இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் பொய்யானது. இந்த வழக்கு சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
22.04.2026.